சிவகங்கை நகரக் கழகச் செயலாளர் துரை ஆனந்த் -

## ஒன்றிய செயலாளர் ஜெயராமன் மூத்த சகோதரர் எம்.கிருஷ்ணன் மரணம்!

சிவகங்கை, நவ. 23-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவருமான சி.எம்.துரைஆனந்த் , சிவகங்கை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.ஜெயராமன் ஆகியோரது மூத்த சகோதரர் எம்.கிருஷ்ணன் அவர்கள் மரணம் அடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை ஆனந்த், சிவகங்கை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.ஜெயராமன் ஆகியோரது மூத்த சகோதரர் எம்.கிருஷ்ணன் வயது58. கோவையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

இவரது மனைவி சிவகங்கை தாலுகா இடையமேலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார். இவர்களுக்கு க்கு இரண்டு மகள்கள் உள்ளார்கள்.

இரண்டு மகள்களுக்கும் திருமணம் நடைபெற்று விட்டது.


நேற்று முன்தினம் செவ்வாய் கிழமை மாலை இடையமேலூரிலிருந்து இருசக்கர வாகனத்தில் கிருஷ்ணன் சென்று கொண்டிருந்த போது மாடு குறுக்கே சென்றதில் கிருஷ்ணன் கீழே தடுமாறி விழுந்ததில் தலையின் பின்புறம் பலத்த அடிபட்டு மயங்கி விழுந்தார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மதுரையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததில் சிகிச்சை பலனின்றி மரணம்அடைந்தார்.

மரணம் அடைந்த கிருஷ்ணனின் உடல் அவரது சொந்த ஊரான வேம்பங்குடியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

கிருஷ்ணன் உடலுக்கு முன்னாள் எம்.எல்.ஏ., எஸ்.மாரியப்பன் கென்னடி, மானாமதுரை ஒன்றியக்குழு துணைத்தலைவர் முத்துச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் துரை.ராஜாமணி, எம். அண்ணாத்துரை, ஆர்.எம்.கென்னடி, மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதிகண்ணன், நகராட்சி ஆணையர் வேங்கடகிருஸ்ணன், நகராட்சி அலுவலர்கள், அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். நேற்று பிற்பகல் கிருஷ்ணனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்



## முரசொலி மாறன்

**நவம்பர் 23 (2003)**

“திராவிட இயக்க முன்னோடி – கழகத்தின் தூண் – ஈடில்லா சிந்தனைச் செம்மல் – மாபெரும் ராஜதந்திரி – முரசொலியின் பிதாமகன் – கழகத்தின் மூளை – கலைஞரின் மனசாட்சி” என அடைமொழிகள் பலவற்றால் அன்பு தவழ அழைக்கப் பெற்றவர்.

தமது 35 ஆண்டு காலத்திற்கும் மேலான நாடாளுமன்ற அனுபவத்தால், நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை பழுதற உணர்ந்த, பேணிய பண்பாளர்.

மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக திறம்பட பணியாற்றி பெரும்புகழ் பெற்றவர்.

எழுத்தாளராக, பத்திரிகையாளராக, திரைப்பட கதாசிரியராக, வசன கர்த்தாவாக, பாடலாசிரியராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பன்முகப் பரிமாணங்கள் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறையில் அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளானவர்.

தன் இறுதிக்காலம் வரை கழகத்திற்கோ, தலைவருக்கோ, கிஞ்சித்தும் மாற்றுக் கருத்தோ, துரோக சிந்தனையோ இல்லாமல் கழகமே மூச்சென பணியாற்றிய பண்பாளர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## விழுப்புரத்தில் வாகனப் பிரச்சாரப் பேரணி - அமைச்சர் க.பொன்முடி வரவேற்றார்!

விழுப்புரம், நவ 23-

விழுப்புரம் வருகை புரிந்த இருசக்கர வாகன பிரச்சாரக் குழுவினர் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் . மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ. முன்னிலையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து விழுப்புரம் நகரம், கோலியனூர் ஒன்றியம், வளவனூர் பேரூராட்சி, கண்டமங்கலம் ஒன்றியம், கோட்டக்குப்பம் நகரம், வானூர் கிழக்கு மற்றும் மேற்கு, கிளியனூர் ஆகிய பகுதிகளில் பேரணியாகச் சென்றனர்.

சட்டமன்ற டாக்டர் இரா.இலட்சுமணன் , மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன்,, நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் ச. தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றிய குழுத் தலைவர்கள் ஆர். எஸ். வாசன், சச்சிதானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ தினகரன், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சுவை. சுரேஷ். ஒன்றியச் செயலாளர்கள் மும்மூர்த்தி.க, பி. தெய்வசிகாமணி, வே. கணேசன், வி. ஜி. பிரபாகரன், கு. செல்வமணி,

பி. கே. டி. முரளி, எஸ். எஸ். ஜெயமூர்த்தி, மைதிலி இராஜேந்திரன், கிளியனூர் இராஜி , பேரூர் செயலாளர் பா.ஜீவா, ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி. கே.டி. முரளி, துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயக மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர் இளங்கோ, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர்

## பவானி கண்ணன் இல்லத் திருமண வரவேற்பு!

### கழக முன்னணியினர் பங்கேற்பு!

ஈரோடு, நவ.23-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடனும், கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடனும் ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் குணசேகரன் மீனாட்சி ஆகியோரது மகள் கு. கமலி, கரூர் மாவட்டம் தங்கவேல் மருதாம்பாள் ஆகியோரது மகன் த.பால சுப்பிரமணியம் ஆகியோர் திருமண விழா நாளை (24.11.2023 - வெள்ளிக் கிழமை காலை 6 மணிக்கு மேல் 10 மணிக்குள் நடைபெறுகிறது. பின்னர் ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறை ஸ்ரீ ஐயப்ப சேவா மிஷன் டிரஸ்ட்டில் திருமண வரவேற்பு விழா நடைபெற உள்ளது.

திருமண வரவேற்பு விழாவில் கழக முன்னணியினர், மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.




23-11-2023
20 ஆம் ஆண்டு நினைவு நாள்

அண்ணாவின்
அறிவுத் திருவிளக்கே!

கலைஞரின்
மனசாட்சி மாணிக்கமே!

படை நடத்தும்
“இளம் தென்றல்”
படைத்திட்ட
பவளவிழா கண்டீரோ!

மாலையும் கழுத்துமாய்
மலைபோல நின்றீரோ!

இவண்
இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
மாவட்ட செயலாளர்




இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.